# வெட்டப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் ஈடாக 100 மரங்கள் நடப்பட வேண்டும்



## -அன்வார் உத்தரவு

கோலாலம்பூர், மே 16– கோலாலம்பூர் மாநகர் பகுதியில் வெட்டிச் சாய்க்கப்படும் ஒவ்வொரு மரத்திற்கும் ஈடாக நூறு மரங்கள் நடப்பட வேண்டும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்று உத்தரவிட்டார்.

அண்மையில் கோலாலம்பூரில் இரண்டு பெரிய மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்த சம்பவத்தைத் தொடர்ந்து, மாநகர மேயர் கமாருல்ஸமான் மாட் சாலேக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தமது "எக்ஸ்" தளப் பதிவில் அன்வார் குறிப்பிட்டுள்ளார்.

ஜாலான் சுல்தான் இஸ்மாயில் சாலையில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று பெரிய மரமொன்று சாய்ந்ததில் ஒருவர் உயிரிழந்ததோடு இருவர் காயமுற்றனர்.

அதனைத் தொடர்ந்து, ஆபத்தானது எனக் கருதப்படும் 28 மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் அறிவித்துள்ளது.

இரண்டு நாள்களுக்குப் பின்னர் ஜாலான் பினாங்கில் மற்றொரு பெரிய மரம் சாய்ந்தது. அச்சம்பவத்தில் மலாக்கா முதல்வர் அப்துல் ராவூஃப் யூசோப்பின் வாகனம் நூலிழையில் தப்பியது. அதில் அவருக்கு காயம் ஏற்படவில்லை.

ஆபத்தை விளைவிக்கும் வகையிலான மரங்கள் உடனடியாக வெட்டிச் சாய்க்கப்படும் என்றும் அதற்குப் பதில் மறுநடவுத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் கூட்டரசு பிரதேச அமைச்சர் டாக்டர் ஜலீஹா முஸ்தாபா தெரிவித்துள்ளார்.